10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 199 சனிக்கிழமை டிசெம்பர் 09 2017 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## "சரித்திரம் படைப்போம்"

யாழ்ப்பாணம், டிசெ.09

"வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே. உள்ளூராட்சி சபைத் தேர்தல் நெருங்கும் வேளையில் இந்தக் கூட்டமைப்பைப் பிளவுபடுத்த உள்ளுக்குள்ளும் வெளியிலும் சிலர் கங்கணம் கட்டிச் செயற்படுகிறார்கள். இதற்குத் துணைபோகாதீர்கள். 06




## உண்மையை வெளிப்படுத்துங்கள் யாழ். நகரில் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 09


காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உண்மை நிலையை வெளிப்படுத்தக் கோரி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பஸ் நிலையம் முன்பாக மதியம் 12.30 மணிக்குத் தொடங்கிய இந்தப் போராட்டம் சுமார் 45 நிமிடங்கள் நீடித்தது.

சோசலிஷக் கட்சியைச் சேர்ந்த லலித், குகன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு நேற்று யாழ். நீதிமன்றில் இடம்பெற்றது. இதற்காக யாழ்ப்பாணம் வந்தவர்களுடன் வடக்கு, கிழக்கு, தென்னிலங்கையைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இதன்போது காணாமல் ஆக்கப் 06

## விலகிச் சென்றவர்கள் மீளவும் வருவார்கள்
### முதலமைச்சர் நம்பிக்கை



யாழ்ப்பாணம், டிசெ.09

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து எவரும் வெளியேற மாட்டார்கள். எல்லோரும் திரும்பி வந்து சேர்ந்து விடுவார்கள்."

- இவ்வாறு தெரிவித்த வட 06

# சம்பந்தரின் கதிரை என்னுடையதே!
## ஆனந்தசங்கரி தெரிவிப்பு




கிளிநொச்சி , டிசெம்பர் 09

"நான் பல விட்டுக் கொடுப்புக்களைச் செய்திருக்காவிட்டால், சம்பந்தரின் பதவி நாற்காலி என்னுடையதாகவே இருக்கும். நாட்டுப்பற்றிருப்பவர்கள் எங்களுடைய புதிய கூட்டணியில் வந்து இணையுங்கள், கடந்த கால கூட்டமைப்பு போல் தனிக்கட்சி அதிகாரம் இங்கில்லை" என வீ.ஆனந்தசங்கரி ஏனைய கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"பொய் மற்றும் குற்றச்சாட்டுகள் சுமத்துவதை விடுத்து, தமிழ்த் தேசியத்தின் மீது பற்றுடையவர்கள் எம்முடன் ஒன்றி 06

### இணக்கம் இல்லையேல்
## புளொட் போட்டியிடாது

யாழ்ப்பாணம், டிசெ. 09

ஆசனப் பங்கீட்டில் இணக்கம் எட்டப்படவில்லை என்பதற்காக கூட்டமைப்பை விட்டு எந்தக் கட்டத்திலும் புளொட் வெளியேறாது. ஆனால் தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கும் என பங்காளிக் கட்சியான புளொட் தீர்மானித்துள்ளது.

இத்தகவலை அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் வட 06

## யாழ்.பல்கலையில் நேற்றுப் பட்டமளிப்பு



யாழ்ப்பாணம் , டிசெ.09

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் 33ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

மங்கல இசை முழங்க பாரம்பரிய கலாசார முறைப்படி பட்டதாரிகள் மற்றும் விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள் ஆகியோர் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு முதன்மை மண்டபத்தில் பட்டம் வழங்கும் நிகழ்வுகள் நடைபெற்றன.

மூதவையால் 06

### லலித், குகன் வழக்கு
## சாட்சியாக கோத்தா

யாழ்ப்பாணம் , டிசெ. 09

லலித் மற்றும் குகன் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான ஆள்கொணர்வு மனுவில் சாட்சிகள் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர்கள் கோத்தபாய ராஜபக்ச, கருணாரட்ண ஹெட்டி 06

## கே.பி. மீது நடவடிக்கை
### ஐ.தே.க. பகிரங்கம்

கொழும்பு, டிசெ. 09

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச நிதி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவரும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் கைது செய்யப்பட்டவருமான கே.பி. என்று அறியப்படும் குமரன் பத்மநாதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என ஐ.தே.க அறிவித்துள்ளது. 06




உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# வடக்கு அமைச்சர் சர்வேஸ்வரன் கவலை

யாழ்ப்பாணம், டிசெ.09

நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கு சேவை வழங்கிய தமிழ் சமூகம் இன்று தன் சமூகத்திற்குச் சேவையாற்ற முடியாத நிலையிலுள்ளது. அண்மையில் வட பகுதிக்கு நியமிக்கப்பட்ட தாதியர்களில் 90 பேரில் இருவரே தமிழர்கள். தமிழ் மொழி தெரியாத வைத்தியர்கள் மற்றும் தாதியர்களிடம் எமது உடல் ஆரோக்கியத்தைப் பரிசோதிக்கின்றோம்.

- இவ்வாறு தெரிவித்தார் வட மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன்.

யாழ்.மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



மேலும், 83 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தேவைகள் நிரம்பி தென் மாகாணம் மற்றும் ஏனைய மாகாணங்களில் எங்களுடைய வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், சிவில் சேவையாளர்கள் அனைவரும் சேவை செய்த காலம் காணப்பட்டது. ஆனால் இன்று எமது மாகாணங்களுக்கு தேவையான தகுதியானவர்களை எம்மால் உருவாக்க முடியவில்லை.

வடக்கு கிழக்கின் நான்கு மாவட்டங்களின் அரச அதிபர்கள் சிங்களவர்களாக இருக்கிறார்கள். பல பிரதேச செயலர்கள் சிங்களவர்களாக இருக்கிறார்கள். வட மாகாண சபையின் கணக்காளர்கள் சிங்களவர்களாக இருக்கிறார்கள். சாதாரண உதவியாளர்களாக சிங்களவர்களை செலுத்துகின்ற நிலைமை காணப்படுகிறது.

இலங்கை முழுவதற்கும் சேவை வழங்கிய சமூகம் இன்று தனக்கு சேவை செய்ய வல்லுநர்கள் இல்லாத நிலையைப் பார்க்கின்றோம். இந்த நிலைமை மாறவேண்டும். கல்வியாளர்களுக்கு இது சார்ந்த பெரும் பொறுப்பு இருக்கிறது என்றார். (ச-4)

# தே.அ.அட்டை வழங்கும் நடமாடும் சேவை இன்று

கரணவாய், டிசெ. 09

கரவெட்டிப் பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்வதற்கான இலவச நடமாடும் சேவை இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் நெல்லியடி தடங்கன் புளியடி திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

புதிதாக அடையாள அட்டை பெற்றுக்கொள்ளல் தொலைந்த மற்றும் சேதமடைந்த அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளல், பெயர் மாற்றம் செய்தல் போன்ற இதர சேவைகள் இதில் இடம்பெறவுள்ளன.

இந்த நடமாடும் சேவையில் கரவெட்டி மேற்கு நெல்லியடி வடக்கு நெல்லியடி நெல்லியடி கிழக்கு அல்வாய் அல்வாய் தெற்கு மற்றும் அத்தாய் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தோரை கலந்து கொண்டு பயன் பெறுமாறும்

புகைப்படம் தபால் உறை முத்திரை பிறப்புச் சான்றிதழ் பொலிஸ் முறைப்பாட்டுப்பிரதி மற்றும் திருமண பதிவுச் சான்றிதழ் என்பவற்றை கொண்டு வருமாறும் கரவெட்டிப் பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் அறிவித்துள்ளார். (ச -66)



தொடரும் பணிப்புறக்கணிப்பால்

# ரயில் பயணிகள் அசௌகரியம்

கரணவாய், டிசெ. 09

ரயில் ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். ரயில் சாரதி உதவியாளர்களை இணைத்துக் கொள்வது தொடர்பான முறைமையில் உள்ள இடர்பாடுகளை களையக் கோரி நேற்று முன்தினம் முதல் ரயில் சாரதிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு செல்வோர், கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருவோர் பெரும் இடர்களை சந்திக்கின்றனர். முன் ஆசனப்பதிவுகளை மேற்கொண்டவர்களும் இலவச ரயில் பற்றுச்சீட்டைப் பயன்படுத்தி முன் ஆசனப்பதிவுகளை மேற்கொண்ட அரச ஊழியர்களும் இப்பணிப்புறக்கணிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை யாழ். குடாநாட்டிலுள்ள ரயில் நிலையங்கள் அனைத்தும் பூட்டப்பட்டு பணியாளர்கள் இன்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றன. அத்துடன் சில ரயில் நிலையங்களின் அதிபர்கள் தங்கள் நிலையங்களைப் பூட்டி அவற்றின் திறப்புக்களை பொலிஸ் நிலையங்களில் ஒப்படைத்துள்ளனர் எனப் பெயர் குறிப்பிட விரும்பாத அதிபர் ஒருவர் தெரிவித்தார். இந்தப் பணிப் புறக்கணிப்பு இன்றும் தொடரும் எனக் கூறப்படுகின்றது. (ச - 66)

# கட்டாயமாகிறது அறநெறிக் கல்வி

யாழ்ப்பாணம், டிசெ.09

2019 ஆம் ஆண்டளவில் அறநெறிக் கல்வி கட்டாயமாக்கப்படும் என்று வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமான காமினி விக்கிரம பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடந்த புத்தசாசன அமைச்சுக்கான வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பௌத்த கோட்பாடு சிந்தனைகளை உலகில் முன்னெடுக்கும் கேந்திர நிலையமாக இலங்கையை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும். கொள்கையை மதிக்கும் சமூகமொன்றை உருவாக்க முடியாவிட்டால் எமது பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த முடியாது.

நாடாளுமன்றத்தில் தியான வகுப்பொன்றை ஏற்படுத்த வேண்டும். கொள்கையை மதிக்கும் சமூகம் ஒன்றை கட்டியெழுப்ப பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# "வீடு" 14 வேட்பாளர்கள் உதயசூரியனுக்கு தாவல்

வவுனியா, டிசெ. 09

நெடுங்கேணி பிரதேச சபைத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் போட்டியிடவிருந்த 14 வேட்பாளர்கள் நேற்று தமிழ் விடுதலைக் கூட்டணி அணியுடன் இணைந்துகொண்டனர் என அறியமுடிகின்றது.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த நெடுங்கேணி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள் மூவரும் புளொட், ரெலோ கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 11 பேருமே இவ்வாறு உதயசூரியன் அணியுடன் இணைந்துள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் ஈ.பி.ஆர்.எல்.எவ்விலும், சிலர் ஈரோஸ் கட்சியிலும் இணைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ச)

# வடக்கு - கிழக்கில் ஆழ்கடல் மீன்பிடிக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, டிசெ. 09

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகள் இன்னும் முழுமையாக வழமைக்கு திரும்பவில்லை என்று இடர் முகாமைத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

மோசமான காலநிலை காரணமாக வடக்கு- கிழக்கில் கடந்த 4 நாட்களுக்கு மேலாக மீனவர்கள் தமது தொழிலுக்காக கடலுக்கு செல்லவில்லை. இருப்பினும் நேற்று குறிப்பிட்ட எல்லைக்குள் மீன்பிடி நடவடிக்கையில் மீனவர்கள் ஈடுபட்டனர்.

ஆழ்கடல் மீன்பிடி தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அறிவிப்பு வெளியான பின்பே மீனவர்கள் மீன்பிடிக்க செல்லமுடியும் எனக் கூறப்பட்டது. மீன்பிடி நடவடிக்கையில் கடற்தொழிலாளர்கள் ஈடுபடாததால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களின் வாழ்வாதார பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். (ச)



தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய நூலக வாசகர் வட்டத்தின் "நூல்விழி" நூல் வெளியீடு நேற்றுப் பாடசாலையில் இடம்பெற்றது. அதிபர் இரா.ஸ்ரீநடராசா வெளியிட வட மாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். (படம் 66)



நல்லூர் ஐயப்பன் ஆலய மூலவர் நேற்று நெல்லியடி முருகன் ஆலயத்துக்கு ஊர்வலமாக சென்றபோது... (படம் 11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
சனி, 09 டிசெம்பர் 2017 ethirolimedia@gmail.com

## வாய் திறக்க வேண்டும்

மௌனிகளாக இருப்பது சில சமயங்களில் இராஜதந்திரமாக இருந்தாலும், இன்னும் சில இடங்களில் சரியான பாதைக்கு வழிகாட்டாமல் இருக்கும் தவறுக்கும் வித்திடலாம். இதில் இரண்டாவது வகையான மௌனத்தையே வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் கைக்கொள்வதாகப் படுகின்றது.

வரலாற்றின் மிக முக்கிய திருப்பங்கள் தமிழர் அரசியலில், உள்ளூராட்சித் தேர்தலை முன்னிறுத்தி நடந்து கொண்டிருக்கின்றன. சில மாதங்களுக்கு முன்னர் தமிழரசுக் கட்சியால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம், வடக்கு முதலமைச்சர் பதவியில் இருந்து விக்னேஸ்வரன் தூக்கியெறியப்பட இருந்த போது அவருக்கு உறுதுணையாக தமிழ் மக்களும், தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ என்பன இருந்தன. அந்த ஆதரவு அலையின் எழுச்சியாலேயே தமிழரசுக் கட்சி பயந்து போய் முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விலக்கிக் கொண்டது.

முதலமைச்சருக்கு எதிரான காய் நகர்த்தல்களைத் தமிழரசுக் கட்சியினர் மேற்கொண்ட சமயத்தில் தன்னியல்பாக நிகழ்ந்த மக்கள் எழுச்சி, தமக்கான அடுத்த தலைமையாக அவரை அங்கீகரித்தன. கூடவே தமிழரசுக் கட்சியில் இருந்து விலகி, முதலமைச்சரின் தலைமையில் கீழ் புதிய அரசியல் சக்தி ஒன்று உருவாக வேண்டும் என மக்கள் விரும்பினர். இதனை முதலமைச்சரின் இல்லத்துக்கு முன்னால் கூடிய மக்கள் வெள்ளத்தினரும் ஒரே குரலில் கோஷமிட்டு வெளிப்படுத்தினர். ஆனால், இதற்கு அப்போது முதலமைச்சர் எந்தப் பதிலும் சொல்லவில்லை. அப்போதைய பிரச்சினையை சமரசமாக முடிப்பதற்காக அவர் அந்த முடிவைச் சொல்வதை அவர் அப்போதைக்குத் தவிர்த்திருக்கலாம்.

ஆனால் இப்போது அப்படியல்ல. மூன்று பிரதான கூறுகளாக தமிழ்த் தேசியத்துக்காக அரசியல் செய்வதாகக் கூறிக் கொள்ளும் கட்சிகள் பிரிந்து நிற்கின்றன. ஒருவரையொருவர் மாறி, மாறி "நீ துரோகி, நீ இந்தியாவின் ஆள், றோவின் கைப்பொம்மை" என்று சேறு பூசி விளையாடுகிறார்கள். கட்சித் தாவல்களும் தாராளமாக நடக்கின்றன. யார் எந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்பதையே 'மை'போட்டுப் பார்த்துத்தான் கண்டுபிடிக்கவேண்டியிருக்கிறது. கட்சிகள் மட்டுமல்லாது மக்களும் இந்தக் கூட்டுகளின் பாய்ச்சல்களால் குழம்பிப் போயிருக்கிறார்கள். எது உண்மையாகவே தங்களுக்கான கட்சி என்பதைத் தெரிவு செய்வதில் மக்களுக்கு இப்போதே தடுமாற்றம் தெரிகின்றது.

முன்னைய தேர்தல்களில் இரு தெரிவுகள் மட்டுமே தமிழ்த் தேசியத்தை நேசிப்போருக்கு இருந்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என இந்த இரண்டில் ஒன்றை அவர்கள் இனங்கண்டு வாக்களிக்க முடிந்தது. ஆனால் இப்போது மூன்றாவதாகவும் ஒரு கூட்டணி வந்துவிட்டது. ஒரே பொருளை, ஒரே விலையில் விற்கும் இந்த மூன்று கடைகளில் எதைத் தெரிவு செய்வது?

இந்த நிலையில் தான் தமிழ் மக்கள் தமது அடுத்த நம்பிக்கைக்குரிய தலைமையாக அங்கீகரித்த வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். ஏற்கனவே தமிழரசுக் கட்சி மீது உள்ளூரக் கசப்பான உணர்வையே முதலமைச்சர் கொண்டிருந்தாலும், பொது வெளிகளில் அவர் தமிழரசுக் கட்சியையோ கூட்டமைப்பையோ விட்டுக் கொடுப்பதில்லை. அதேவேளை அவர் இணைத்தலைவராக இருக்கும் தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசிய முன்னணியையே மறைமுகமாக ஆதரிக்கிறது. ஆனால் அதிலும் தனக்கு உடன்பாடு இல்லையென்பது போலவே முதலமைச்சர் நடந்து கொள்கிறார். உதய சூரியன் சின்னத்திலான புதிய கூட்டணி பற்றி முதலமைச்சரின் நிலைப்பாடு இன்னும் வெளியிடப்படவில்லை.

இப்படிப்பட்ட நிலையில் தன்னுடைய தார்மீக ஆதரவை இந்த மூன்றில் ஒரு கட்சிக்கு முதலமைச்சர் வெளியிடவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள். மக்களின் மனதறிந்து, சரியான தெரிவை முதலமைச்சர் முன்வைப்பாரா? அல்லது தன் கள்ள மௌனத்தையே தொடர்வாரா?

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# வரதராஜப்பெருமாள் மீண்டும் இலங்கைப் பிரஜை

## -அடுத்த முதலமைச்சராக வசதி?-



கொழும்பு, டிசெ. 09

வடக்கு, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாப அணியின் முக்கியஸ்தருமான அ.வரதராஜப்பெருமாளுக்கு இலங்கைக் குடியுரிமை மீளவும் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தேர்தலில் போட்டியிடக் கூடிய வகையில் நேற்று முன்தினம் அவருக்குக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. கடந்த ஆண்டு அவர், இலங்கைக் குடியுரிமைக்கு விண்ணப்பித்தபோதும் அது நிராகரிக்கப்பட்ட நிலையிலேயே தற்போது வரதராஜப் பெருமாளுக்கு குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்நதியாவின் கடும் அழுத்தத்தாலேயே அவருக்குக் குடியுரிமை வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றுது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தின் பின்னர் வந்த இணைந்த வடக்கு, கிழக்கின் முதலாவது முதலமைச்சராக அவர் பதவி வகித்திருந்தார்.

எனினும் 13ஆவது திருத்தத்தை தீர்வாக ஏற்க தமிழீழ விடுதலைப் புலிகள், சுயாட்சி அதிகாரங்களைக் கேட்டனர். அதனால் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து முதலமைச்சர் பதவியைத் துறந்த வரதராஜப்பெருமாள், இந்தியாவில்தஞ்சமடைந்தார்.

மேலும், போர் நிறைவடைந்ததை அடுத்து இந்தியாவிலிருந்து சுற்றுலா விசாவில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து சென்ற வரதராஜப்பெருமாளுக்கு நேற்றுமுன் தினம் இலங்கைக் குடியுரிமை மீள வழங்கப்பட்டது.(ச)

## வியர்க்கும் இயேசு?

## கொழும்பில் பரபரப்பு

கொழும்பு, டிசெ. 09

வத்தளை புனித ஆனாள் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ள இயேசு படத்தில் நெற்றியில் இருந்து வியர்வை தோன்றுவதாகக் கூறப்படுகிறது. இந்த அதிசயத்தைப் பார்க்கப் பெருவாரியான மக்கள் தேவாலயம் நோக்கிப் படையெடுத்த செல்கின்றனர்.

12 வருடங்களுக்கு முன் இந்தியாவின் சாலக்குடியில் இருந்து வந்த பாதிரியார் குழுவொன்று தேவாலயத்துக்கு வந்த பக்தர்கள் சிலருக்கு படங்களை வழங்கியிருந்தது.

அந்தப் படங்களுள் ஒன்று அப்பகுதியை சேர்ந்த நிரோமி அமரசிங்க என்ற பெண்ணுக்கும் வழங்கப்பட்டது. அப்படத்தில் இருந்து கடந்த ஒக்ரோபர் மாதம் அந்தப் படத்தில் இருந்து வியர்வை வழிய ஆரம்பித்தது.

இதையடுத்து வண.பிதா சஞ்சீவ் மெண்டிஸிடம் நிரோமி கூறினார். அவரது அறிவுரைப்படி அந்தப் படம் புனித ஆனாள் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. (ச)

## இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

## மன்னாரில் கட்டுப்பணம்



மன்னார், டிசெ. 09

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக, மன்னார் தேர்தல் திணைக்களத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்டுப்பணத்தை நேற்று செலுத்தியுள்ளது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் இணைச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தலைமையில், சட்டத்தரணி நடராஜா காண்டிபன், மன்னார் மாவட்டத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர் அந்தோனி சகாயம் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

மன்னார் நகரசபை, மன்னார் பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை, மடு பிரதேசசபை ஆகிய 5 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்காக இந்தக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

# பனைமரக்காடு படத்துக்கு தயாரிப்பாளர் போர்க்கொடி

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ்ப்பாணத்தில் உருவான முழு நீளத் திரைப்படமான "பனைமரக்காடு" திரைப்படம் கொழும்பில் திரையிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது என படக்குழுவினர் கவலை தெரிவித்தனர்.




வறுமை ஆராய்ச்சி நிலையத்தினரானால் இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தரங்கிணி திரையரங்கில் கடந்த 5ஆம் திகதி பனைமரக்காடு திரைப்படத்தைத் திரையிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. இந்தத் திரைப்படத்தின் இயக்குநர் கேசவராஜன் நவரட்ணம், எழுத்தாளர் வெற்றிச் செல்வி மற்றும் பிரபல சிங்களத் திரைப்பட இயக்குநர் அசோக ஹந்தகம ஆகியோருடனான கலந்துரையாடலுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இந்நிலையில் குறித்த திரைப்படத்தைத் திரையிடுவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னர் செவ்வேள் என்பவர் தானே பனைமரக்காடு திரைப்பட தயாரிப்பாளர் எனவும், தனது அனுமதி இன்றி, பனைமரக்காட்டை வெளியிட்டால் சட்ட நடவடிக்கைக்குச் செல்வேன் என இலங்கை தேசியத் திரைப்பட கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இரு தரப்பினருக்கும் இடையில் சமரசத்தை ஏற்படுத்தி திரைப்படத்தை குறித்த திகதியில் திரையிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கு செவ்வேள், பல நிபந்தனைகளை விதித்து இறுதி நேரத்தில் நிகழ்ச்சி நிரலில் மாற்றங்களை செய்யக் கேட்டார். அதற்கேற்ப நிகழ்ச்சி நிரலும் மாற்றப்பட்டது. ஆயினும் இறுதி நேரத்தில் 5 ஆம் திகதி காலை (மாலை திரையிடப்படுவதாக இருந்த என அறிவிக்கப்பட்டுவிட்டது) தன்னால் கொழும்புவர முடியாது, எனவே குறித்த திகதியில் திரையிடக்கூடாது என அவர் அறிவித்துள்ளார். இதனால் குறித்த திரைப் படம் அன்றைய திகதி திரையிடப்படாமல் நிறுத்தப்பட்டது. (அ)

## இன்று நாளும் கோளும்

09.12.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 23 ஆம் நாள்

ஷஷ்டி மு.ப. 09.24 மணி வரை | மகம் பி.ப. 11.53 மணி வரை

இராகுகாலம் 09.00 - 10.30 | சுபநேரம் மு.ப. 07.45 - 08.45 | எமகண்டம் 01.30 - 03.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெற்றி | சோர்வு | விவேகம் | நட்பு | பெருமை | வீம்பு | தாமதம் | அனுகூலம் | ஜெயம் | போட்டி | மறதி | ஆதரவு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரை சேராத முல்லை மீனவர்கள்

முல்லைத்தீவு, டிசெ.09

முல்லைத்தீவு பெருங்கடலுக்கு நேற்றுமுன்தினம் நள்ளிரவில் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இதுவரையில் கரை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் மீன்பிடித் தொழிலாளர்களின் இரண்டு மீன்பிடிப் படகுகளே இவ்வாறு கரைதிரும்பவில்லை என அந்தப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் தெரிவித்துள்ளனர். எனினும், இவர்களின் தொடர்பு கரைக்கு கிடைத்துள்ளதாக குறித்த மீனவர்கள் கூறியுள்ளனர். அந்த வகையில், பெறுமதியான வலைகளின் ஒருபகுதி கடல்நீரோட்டத்தை எதிர்கொண்டு அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும், மீதி வலையை மீட்கும் முயற்சியில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் கரை திரும்பாத மீனவர்கள் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## மன்னார் நீதிபதியின் மாற்றலும் இரத்தானது!

மன்னார், டிசெ.09

மன்னார் மாவட்ட நீதிபதி ஏ.ஜி. அலெக்ஸ்ராஜாவின் இடமாற்றம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நீதிச் சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

மட்டக்களப்பு நீதிவான் மா.கணேசராஜா, மன்னார் மாவட்ட நீதிபதியாக இடமாற்றம் செய்யப்பட்டார். அதேவேளை, மன்னார் மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா கல்முனை மாவட்ட நீதிபதியாக இடமாற்றப்பட்டார்.

வருடாந்த இடமாற்றத்தில் நீதிபதிகள் இருவருக்கும் வழங்கப்பட்ட இந்த இடமாற்றம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் நீதிச்சேவை ஆணைக்குழுவால் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் நீதிபதிகள் இருவரினதும் இடமாற்றம் இடைநிறுத்தப்படுவதாக நீதிச் சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

# சுதந்திரக் கட்சியும் யாழில் கட்டுப்பணம்




சாவகச்சேரி நகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப் பணத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்றுச் செலுத்தியது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு நேற்றுக் காலை 10 மணிக்கு வருகை தந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் கட்டுப்பணத்தைச் செலுத்தி ,வேட்புமனுப் படிவங்களைப் பெற்றுக்கொண்டார்.(அ)

# சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 09

இந்த வருடத்தின் முதல் காலாண்டுப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் சிறு வீழ்ச்சி காணப்பட்டபோதிலும், தற்சமயம் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் கணிசமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

புத்தசாசனம், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் மத விவகாரம், சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத விவகாரம், டிஜிட்டல் உட்கட்டமைப்பு, தொலைத் தொடர்புகள், விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சித் துறை ஆகிய அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டின் மீதான குழுநிலை விவாதங்கள் நாடாளுமன்றில் நேற்று நடைபெற்றன.

இதன்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

“வரலாற்றிலேயே மிகக் கூடுதலான சுற்றுலாப் பயணிகள்- சுமார் 22 இலட்சம் சுற்றுலாப் பயணிகள்- கடந்த வருடத்திலேயே இலங்கைக்கு வருகைத் தந்துள்ளனர். சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கையைச் ஒரு சிறந்த இடமாக காண்பிப்பதற்கு பல்வேறு ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன” என்றும் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.(அ)

# மீனவரின் சடலம் மீட்பு

ஒலுவில், டிசெ.09

ஒலுவில் பிரதேசக் கடலில் மீன்பிடி படகு கவிழ்ந்ததில் காணாமல்போன மீனவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான அபுசாலி முகம்மது இப்றாஹிம்(39) நேற்று காணாமல் போயிருந்த நிலையில் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த மீனவர் மீன்பிடிக்கச் சென்று கரையை நோக்கி திரும்பிக் கொண்டிருக்கும் போது அவரது படகு பெரும் அலையினால் அடிக்கப்பட்டு கவிழ்ந்துள்ளது. இந்த நிலையில் காணாமல் போன அவரை தேடும் பணியில் மீனவர்களும், கடற்படையினரும் நேற்று முதல் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் ஒலுவில் வெளிச்ச வீட்டுக்கு முன்பாக கடற்கரை பிரதேசத்தின் கற்பாறைக்குள் குறித்த நபரின் சடலம் மீட்க முடியாத வகையில் சிக்குண்டிருந்தை பொலிஸார் கண்டு பிடித்தனர். சடலத்தை மீட்டதன் பின்னர் பிரேத பரிசோதனையின் பொருட்டு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. (அ)



# அரசியல் தாளம் உது ஒரு திருகுதாளம்

மஹிந்த சொல்லிப் போட்டார், தன்ரை தம்பி கோத்தாவுக்கு அரசியல் தெரியாதெண்டும் ஒரு வியாபாரி அவரை அரசியலுக்கை இழுத்து மோசம் செய்திறதுக்காக போஸ்டர் அடிச்சு ஒட்டிப் பிரச்சினை படுத்திறார் எண்டும் சொல்லி இருக்கிறார்.

அவருக்கு மூக்கைப் பிடிச்சா வாயை ஆவெண்ணத் தெரியாத ஆள் எண்டு தமையன் நினைக்கிறார். ஆனால் தமையனுக்கு ஒண்டுந் தெரியாது எண்டு அவர் நினைக்கிறார். இவை இரண்டு பேருக்கும் இடையிலை நிக்கிறவர் சொல்லுறார் இவை எல்லாருக்கும் அரசியல் தெரியாது. எனக்கு மட்டுந்தான் அரசியல் தெரியும் எண்டு. எல்லாரையுக் காட்டிலும் – “தாத்தே, லொக்குத் தாத்தே, பொடித் தாத்தே” – எல்லாரையும் விட தனக்கு மட்டுந்தான் அரசியல் தெரியும் எண்டு நாமல் நினைக்கிறார். அவை எல்லாரையும் கட்டி கமக்கட்டுக்கை வைக்கிற மாதிரி ஒருத்தருக்கும் ஒண்டும் தெரியாது. என்ரை சொல்லைக் கேட்டிருந்தால் இப்ப எல்லாரும் சமூகக் கைதியளா இல்லாமல் வடிவா சோக்கான சீவியத்தோடை இருந்திருக்கலாம் எண்டு மஹிந்த பெண்சாதி நினைக்கிறா. உதாலை மொத்தக் குடும்பமே.......! உது படக்கதை இல்லை. ராத்திரி நான் கண்ட கனவு.

இதைச் சொல்ல முதலி “மஹிந்த சொல்லுறதை நம்பலாமே அண்ணை. உவர் ஆட்சியிலை இருக்கேக்கை காலமை ஒரு கதை பின்னேரம் ஒரு கதை இரவு ஒரு கதை, படுக்கேக்கை ஒரு கதை சொன்ன ஆளெல்லே! போன கிழமை உவர், “நான் பிரபாகரனுக்குக் கூட மண்டியிடேல்லை. அப்பிடியான ஆள் நான். இனி ஆருக்காவது மண்டியிடுவனோ” எண்டெல்லே சொல்லி இருக்கிறார் அண்ணை. “நான் பிரபாகரனுக்கே...” எண்டு உவர் சொல்லேக்கை, பிரபாகரனைவிட வீரனும், பெரியாள் எண்டு ஒருத்தரும் இலங்கையிலை இல்லை எண்டது தானே விளக்கம். இப்ப பிரபாகரன் இல்லை எண்ட துணிவிலை உவர் உப்பிடிப் பேசிறார். அவர் இருக்கேக்கை ஒருக்கால் சண்டிக் கட்டையுங் கட்டிக் கொண்டு காலி வீதியாலை தனிய நடந்து போயிருந்தால் தெரிஞ்சிருக்கும் உந்த மண்டியிடாத கதை. – எண்டு சொல்லுறான்.

இப்ப கோத்த என்ன செய்யிறார், தான் எலிய எண்ட அமைப்பொண்டைத் துவங்கி கொஞ்ச ஆமிக்காறர், கொஞ்ச காமதுறுமார், கொஞ்சம் படிச்ச முட்டாளுகள் இவை எல்லாரையும் சேத்து எங்கையாவது மேடையைப் போட்டு “தமிழர் வந்து பண்டத்தரிப்பிலை இறங்கினவை. அவை அகதியளா வந்தவை. கந்தரோடை எங்கடை. காளி கோயில் எங்கடை. நயினாதீவு எங்கடை நல்லூர் கந்தன் எங்கடை எண்டு கத்திற ஆளுக்கு அரசியல் தெரியாதெண்டால், நம்பலாமே?

இப்ப கிட்டடியிலையும் காலியிலை “எலிய” விலை உள்ள ஆக்களைச் சேர்த்து மேடை போட்டு – “அதிகாரப் பரவல் எண்டு வந்தால் அது தமிழற்றை பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வு தராது. அவை போய் வேறை ஒரு “ எக்க இராஜியம்” ஒண்டைச் செய்து போடுவினம். இது தான் இரகசியம். நான் ஆட்சிக்கு வந்தால் சிங்கள, தமிழ், முஸ்லிம் எல்லாரையும் கௌரவமா வைச்சிருப்பன். நாட்டைப் பிரிக்க விடன். என்ரை எலிய அமைப்பாலை உதுக்குத்தான் போராடுறன். எண்டு வடிவாச் சொல்லி இருக்கிறார்.

ஆனால் அவர் “தான் ஆட்சிக்கு வந்தால் பன்சல கட்டமாட்டன். பள்ளி வாசலை இடிக்க மாட்டன். கண்ட கண்டபடி தமிழ் பெடியளைப் பிடிக்கமாட்டன். ஆரேன் சொத்துக்கு ஆசைப்படமாட்டன். எங்கடை ஆக்களிலையும் எனக்கெதிரா ஆரேன் கதைச்சால் அல்லது எழுதினால் அவையளை சுட்டுக் கிட்டு , அடிச்சு நொருக்கி ஒண்டுஞ் செய்யாமல் நல்ல பிள்ளையா இருப்பனெண்டு,” – சொல்லேல்லை.

எல்லாரும் பவரோடை இருக்கேக்கை ஒரு கதை. பிடிச்சுக் கையைக் காலைக் கட்டின பிறகு ஒரு கதை. போன கிழமை உவை ஒரு திருகுதாளம் விட்டிருக்கினம் என்னெண்டு தெரியுமோ? எண்டு முதலி கேட்டான்.

கொழும்பு யூனிவசிட்டியிலை உள்ள ஆருக்கோ காசைக் கீசைக் குடுத்தாக்கும் ஒரு ஆய்வெண்ட பேரிலை அடுத்ததா இலங்கையின்ரை ஜனதிபதியா வர ஆரைச் சனம் விரும்புதெண்டு செய்து, பிறகு போட்ட முடிவென்ன தெரியுமே. “இராணுவ அதிகாரத்துடனான கோத்தபாய தான்” எண்டு. அப்பிடிச் சொன்ன ஆக்களைத் தொடர்பு கொண்டு கேட்டால் அவை அது தங்களுக்குத் தெரியாதெண்டு சொல்லிப் போட்டினமாம்.

உது திருகுதாளமோ இல்லையோ? வில்லங்கமாப் போய் மாட்டினது தானே?

- வில்லங்கம் விநாசி

# யாழ்.உள்ளூராட்சியில் ஜே.வி.பியும் போட்டி

யாழ்ப்பாணம். டிசெ.09

யாழ்.மாவட்டத்தில் உள்ள நான்கு உள்ளூராட்சி சபைகளுக்கான கட்டுப்பணத்தை மக்கள் விடுதலை முன்னணியினர்(ஜே.வி.பி) நேற்று வெள்ளிக்கிழமை செலுத்தினர்.

இதன் பின்னர் மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் கருத்து வெளியிட்ட போது,

“யாழ்.மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை , சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் வலி.மேற்கு பிரதேச சபை ஆகியவற்றுக்கான கட்டுப்பணத்தை இன்றைய தினம் செலுத்தி உள்ளோம். மேலும் மூன்று சபைகளுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தவுள்ளோம்.

மக்கள் விடுதலை முன்னணியினர் லஞ்ச ஊழல் மோசடிகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்ட உள்ளோம். கடந்த காலத்து உள்ளூராட்சி சபைகள் ஊழல் இலஞ்சம் நிறைந்து காணப்பட்டன. அதில் இருந்து உள்ளூராட்சி சபைகளை மீட்டெடுப்போம்.




அரசியல் களியாட்டத்தில் கடந்த காலத்தில் நாட்டின் விடுதலைக்காக, கொள்கைக்காகப் போராடினோம் எனக் கூறியவர்கள் இன்று பதவிக்காகவும், கதிரைக்காகவும் தமக்குள் மோதிக்கொள்கின்றனர் ”-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகப் பொறுப்புள்ளவர்களாக மாறினால்
# பெண்கள் மீதான வன்முறை ஒழியும்!



யாழ்ப்பாணம். டிசெ.09

“சமூகப் பொறுப்புள்ளவர்களாக நாம் ஒவ்வொருவரும் மாறுவதன் மூலமே பெண்களுக்கு எதிரான குற்றங்களை முற்றிலுமாக தடுத்து நிறுத்த முடியும்” என்று வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார். யாழ். மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

யாழ். மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலையின் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 6 ஆம் திகதி மதியம் 1 மணியளவில் நடைபெற்றது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான தேசிய வெட்டுப் புள்ளிக்கு மேல் பெறுபேறுகளைப் பெற்ற ஆறு மாணவர்களுக்கான சிறப்பு பரிசில்களையும் கடந்த கல்வி ஆண்டில் சிறந்த கல்வி செயற்பாடுகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களையும் இதன்போது வழங்கிச் சிறப்பித்தார் அமைச்சர் .

“ஆயுத மௌனிப்புக்குப் பின்னர் பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் தமிழர் தாயகத்தில் அதிகரித்துள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான பிரச்சினைகளுக்குச் சட்டத்துக்குட்பட்டு ஓரளவு தீர்வுகண்டுவிடலாம் என்ற போதிலும் அவற்றை சரிசெய்வதில் எங்களது சமூகத்துக்கும் பெரும் பொறுப்புண்டு. அவ்வாறு சமூகப் பொறுப்புடன் இவ்விடயங்களை சரிசெய்வதில் எத்தனைபேர் தாமாக முன்வந்துள்ளார்கள் என்பதை பார்த்தோமானால் ஏமாற்றமே மிஞ்சுகிறது. அரச அலுவலகங்களில் பணி செய்யும் பெண்கள் ஏதோவொரு வகையில் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு பாதிப்பிற்குள்ளாகும் பெண்கள் தமக்கு இழைக்கப்படும் அநியாயங்களை தட்டிக்கேட்காது அடங்கிப் போவதே மீண்டும் மீண்டும் அவ்வாறான குற்றங்கள் இடம்பெற வழிவகுத்துவிடுகிறது. தமக்கு இழைக்கப்படும் அநியாயத்துக்கு நீதி கேட்க முற்படும் போது அச்சுறுத்தல்களையும் அவமானங்களையும் அந்தப் பெண்கள் சந்திக்க வேண்டியுள்ளதாலேயே பெரும்பாலானவர்கள் தயங்குவதற்கு காரணமாக அமைந்துள்ளது. பாதிக்கப்படும் ஒவ்வொரு பெண்ணும் தனக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக நீதிகேட்க துணிவுடன் முன்வருவதன் மூலமே அடுத்த வருடைய பிரச்சினைக்காக குரல் கொடுக்கும் சூழலை ஏற்படுத்த முடியும்” என்று அமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்திருந்தார்.(அ)

## அந்த நாள் ஞாபகம்.....!



**1992.12.09**

வேல்ஸ் இளவரசர் சார்ல்ஸ், இளவரசி டயானா இருவரினதும் பிரிவினை அறிவிக்கப்பட்டது.

## படையினர் வசமுள்ள நீதிமன்றக் காணியை விடுவிக்க நடவடிக்கை
### நீதிபதி இளஞ்செழியன் உறுதி



வடமராட்சி, டிசெ.09

“இராணுவத்தினரின் வசமுள்ள நீதிபதிகளின் வாசஸ்தலம் இருந்த காணியினை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்” என மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்துள்ளார். பருத்தித்துறை நீதிமன்றக் கட்டடத்தொகுதியினை திறந்து வைத்து உரையாற்றிய போது அவர் இவ்வாறு கூறியுள்ளார் .

“ யாழ்ப்பாணத்தில் இன்னொரு மேல் நீதிமன்றம் வேண்டும், அது பருத்தித்துறையில் அமையவேண்டும், என்று நான் விரும்பினேன். ஏனெனில் யாழ்ப்பாணத்தில் இருந்து 22 மைல் தூரத்தில் பருத்தித்துறை உள்ளது. இராணுவத்தினர் வசமுள்ள காணியில் புதிய மேல் நீதிமன்றத்தினை அமைப்பதற்கு நீதியமைச்சருடன் உரையாடி, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க எண்ணியுள்ளேன். நான் சமூகநலனுக்காகவே பாடுபடுகின்றேன். சுயநலத்துக்காக அல்ல. இராணுவத்தின் வசமுள்ள நீதிமன்றக் காணியை விடுவிப்பது தொடர்பாக யாழ். கட்டளைத் தளபதியுடன் கலந்துரையாடி அதனை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.(அ-11)

## சீன கம்யூனிஸ்ட் தலைவர் இலங்கைக்கு வருகிறார்

கொழும்பு, டிசெ.09

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்டத் தலைவர் ஒருவர் அடுத்த வாரம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அனைத்துலகத் திணைக்களத்துக்கான உதவி அமைச்சர் வாங் யாஜுன், வரும் 12ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ளவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தின் போது, வாங் யாஜுன் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 19 ஆவது தேசிய காங்கிரஸ் மாநாடு குறித்து விளக்கமளிக்கவுள்ளார். இந்த மாநாடு, பீஜிங்கில் கடந்த ஒக்ரோபர் 18ஆம்திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## உதவிப்பணம் கொடுப்பனவு

கரவெட்டி, டிசெ.09

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவி பெறுபவர்களுக்கான கொடுப்பனவு டிசெம்பர் 7 ஆம் திகதியிலிருந்து 20 ஆம் திகதி வரை வழங்கும் வகையில் கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே குறித்த காலப் பகுதியில் சகலரும் இக் கொடுப்பனவை தவறாது பெற்றுக் கொள்ளுமாறும் , புதிய பயனாளிகள் 69 பேருக்கு நிலுவையுடன் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாகவும் கரவெட்டிப் பிரதேசசெயலர் கே. சிறிமோகனன் தெரிவித்துள்ளார். (அ-11)

## ரயில்சேவைகள் முடக்கம் மாணவர்கள் திண்டாட்டம்

கொழும்பு, டிசெ.09

ரயில் சேவையாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வேலைநிறுத்தம் காரணமாக, நேற்று மட்டும் மலையகத்துக்கான 16 புகையிரத சேவைகள் முடங்கப்பட்டுள்ளதாக, ரயில் நிலையக் கட்டுப்பாட்டு அதிகாரியொருவர் தெரிவத்தார்.

இந்த வேலை நிறுத்தம் காரணமாக, , பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் உட்பட பொது மக்கள் பலரும், நேற்று பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

பலர் ரயில் நிலையத்துக்கு வருகை தந்து ரயில் இல்லாததன் காரணமாக ஏமாற்றத்துடன் மீண்டும் பஸ் நிலையங்களை நோக்கிச் சென்றனர்.

ரயில் ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக, தபால் சேவைகளும் தாமதமாகின. 6ஆம் திகதியன்று இரவு, வெளிமாவட்டங்களுக்கு அனுப்புவதற்காக இருந்த தபால் பொதிகள் நேற்று அதிகாலை, வாகனத்தின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. இதனால், தபால் திணைக்களத்துக்கு அதிக பணம் செலவிட வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று பாடசாலை மாணவர்களுக்கு, மூன்றாம் தவணைக்கான விடுமுறை வழங்கப்படும் நாள் என்பதால், ரயில் கடவுச்சீட்டுக்களை பெற்றிருந்தவர்கள் அவற் நில் செல்ல முடியாததன் காரணமாக பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். (அ)

## கணிதப் பயிற்சி வெளியீடு





யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கணித பாடஆசிரியர்களான வி.குகநாதன்,வ.பாலமுரளி ஆகியோர் தமது வெளியீடுகளில் ஒன்றான புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட கணிதம் தரம்-8 என்னும் பயிற்சி நூலை, தென்மராட்சி கல்விவலய அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெளியிட்டனர். இந்த வெளியீட்டு நிகழ்வின் போது, தமது முன்னைய நூல்களை மாணவர்களுக்கும், பாடசாலைகளுக்கும் குறித்த நூலாசிரியர்கள் அன்பளிப்புச் செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுத் தோல்வி ரயில்கள் ஓடாது

கொழும்பு, டிசெ.09

ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோவுக்கும், ரயில் தொழிற் சங்கங்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல் தோல்வியில் முடிந்ததால், பணிப்புறக்கணிப்பு போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ரயில் இயந்திர சாரதிகள் சங்கம் ரயில் தொழிற்சங்கங்கள் சில இணைந்து பணிப்புறக்கணிப்பில் ஈடுப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் போக்குவரத்து அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடல் தோல்வியில் நிறைவடைந்தமையை அடுத்து தொடர்ச்சியாக பணிப்புறக் கணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்று ஜனாதிபதியின் செயலாளருடன் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் அது தோல்வியில் நிறைடைந்தமையைத் தொடர்ந்து சேவைப் புறக்கணிப்பு நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(அ)




# போலி நாணயத்தாள் மானிப்பாய் வாசி கைது

மானிப்பாய், டிசெ. 09

போலி நாணயத்தாள்களை வைத்திருந்த ஒருவரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மானிப்பாயைச் சேர்ந்த 31 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். இவரிடம் இருந்து 500 ரூபா தாள்கள் ஒன்பதைத் தாம் கைப்பற்றினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தங்களுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே சந்தேகநபரைத் தாம் கைது செய்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான நபர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டார். (ச)

# தொடர்ச்சிகள்

## புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சுகாதார அமைச்சருமான சிவநேசன் தெரிவித்தார். உள்ளூராட்சித் தேர்தல் ஆசனப் பங்கீடு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் கூட்டிலிருந்து வெளியேறுவதாக ரெலோ அறிவித்தது. புளொட்டும் அதிருப்தி நிலையிலேயே இருந்தது. இது தொடர்பாக அக்கட்சியின் மத்திய குழு கூடி ஆராய்ந்தது.

இந்நிலையில் பங்காளிக் கட்சிகள் இடையே சமாதானத்தை ஏற்படுத்தப் பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பேச்சுக்களில் சுமுகமான முடிவு எட்டப்படாவிடின் - நியாயமான ஆசனப் பங்கீடு இடம்பெறாவிடின் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடாது புளொட் ஒதுங்கும். ஆனால் எந்தக் கட்டத்திலும் கூட்டமைப்பை விட்டு வெளியேற மாட்டோம் என அமைச்சர் சிவநேசன் தெரிவித்தார்.

## யாழ்.பல்கலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிந்துரைக்கப்பட்ட சகல பட்டதாரிகளுக்கும் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் பட்டங்கள் வழங்கிவைத்து, அவர்களைப் பட்டதாரிகளாக அறிவித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் அனைத்து மதங்களின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, ஈஸ்வரபாதம் சரவணபவன் ஆகியோரும் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

33ஆவது பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி அடுத்த வருடம் மார்ச் மாதம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ)

## விலகிச் சென்றவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் "இதற்கு மேல் எதனையும் கூற விரும்பவில்லை" என செய்தியாளர்களிடம் கூறிவிட்டு நழுவிச் சென்றார்.

யாழ். நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நேற்று நடந்த ஆறுமுகநாவலர் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் முதலமைச்சர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் மண்டபத்தை விட்டு வெளியேறிய முதலமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி கேட்க முற்பட்டனர்.

"இந்த காலகட்டத்தில் நான் எதுவும் பேச விரும்பவில்லை" எனினும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் பிளவு குறித்து எழுப்பிய கேள்விக்கு "அவர்கள் வெளியேற மாட்டார்கள். திரும்ப வந்து சேர்ந்துவிடுவார்கள். இதற்கு மேல் நான் எதுவும் சொல்லவில்லை" எனக் கூறிவிட்டு வாகனத்தில் ஏறிச்சென்றார். (ச)

## சாட்சியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாராட்சி ஆகியோரின் பெயர்களும் மனுதாரர்களால் நேற்று இணைக்கப்பட்டது.

எனினும் அவர்கள் இருவரையும் சாட்சியமளிக்க அழைக்குமாறு மனுதாரர்களின் சட்டத்தரணியால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கோரப்படவில்லை.

2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்ப்பாண நகரில் நடத்த திட்டமிடப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்காலில் காணாமல் ஆக்கப்பட்டனர். இதுதொடர்பாக அவர்களின் உறவினர்களால் ஆள்கொணர்வு மனு 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாணையின் போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின. இந்த நிலையில் இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. மனுவின் சாட்சியாளர்கள் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர்கள் கோத்தபாய ராஜபக்ச, கருணாரட்ண ஹெட்டியாராட்சி ஆகியோரின் பெயர்களும் இணைக்கப்பட்டன.

அவர்கள் இருவரையும் சாட்சியமளிக்க அழைக்குமாறு மனுதாரர்களின் சட்டத்தரணிகள் மன்றில் விண்ணப்பம் செய்யவில்லை. இந்த நிலையில் வழக்கு விசாரணை எதிவரும் மார்ச் 29 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (அ)

## உண்மையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டவர்கள் தொடர்பான உண்மை நிலை வெளிப்படுத்தப்பட வேண்டும் எனக் கோரிக்கை எழுப்பப்பட்டது. அத்துடன் இதனுடன் தொடர்புடை பல்வேறு கோஷங்களையும் போராட்டக்காரர்கள் எழுப்பினர். (ச)

## கே.பி. மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளராக இருந்த கே.பி, தலைவர் பிரபாகரனுக்குப் பின்னர் தன்னைத் தானே புலிகளின் தலைவராகப் பிரகடனம் செய்திருந்தார். இந்த நிலையில் அவர் மலேசியாவில் வைத்து இலங்கைப் புலனய்வுப் பிரிவினாரல் கைது செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டார். அதன் பின்னர் மகிந்த அரசுக்கும் அவருக்கும் இடையிலான புரிந்துணர்வின் அடிப்படையில், அவர் 'நாட்டை விட்டு வெளியேறக் கூடாது' என்ற நிபந்தனையோடு விடுவிக் கப்பட்டார்.

தற்போது செஞ்சோலை சிறுவர் இல்லத்தை கே.பி நிர்வகித்து வருகிறார். இந்த நிலையில் 'கே.பி வெளிநாடு செல்லத் தடையில்லை' என அண்மையில் நீதிமன்றம் அறிவித்தது. அதன் பின்னர் கே.பி விவகாரம் தென்னிலங்கையில் மீண்டும் சூடு பிடித்தது.

ஐ.தே.க தலைமையகமான சிறிகோட்டாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஐ.தே.க பொதுச்செயலரும், அமைச்சருமான கபீர் ஹாஷிமிடம், கே.பி தொடர்பில் ஊடகவியலாளர்கள் அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினர்.

"கே.பி குறித்த பல திடுக்கிடும் தகவல்களை விரைவில் அம்பலப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருகின்றது. பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சு நடத்தி விசேட ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி இந்தத் தகவல்களை வெளியிடுவோம். அதன் பின்னர் கே.பி மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிப்போம்" என்று அமைச்சர் கபீர் ஹாசிம் பதிலளித்தார்.(அ)

## சம்பந்தரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணைய வேண்டும். கஜேந்திரகுமார் அரசியலில் பால்குடி. நான் நாடாளுமன்ற போகும் போது அவர் பிறக்கவில்லை. ஆகவே அவர் வாய் திறக்கும் போது யோசித்துவிட்டு திறக்க வேண்டும்.

நான் கஜேந்திரகுமாரின் தந்தை, பேரன் உள்ளிட்ட மூத்த அரசியல் தலைவர்களுடன் சேர்ந்து அரசியல் செய்தவன். ஆகவே எனக்கு வரலாறு தெரியாது பேசுவது சிறுபிள்ளைத் தனமானது. 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க சமஷ்டித் தீர்வை முன்வைத்தே தேர்தலில் போட்டியிட்டார்.

அவருக்கு எதிராக மகிந்த போட்டியிட்டார். ஆனால் கஜேந்திரகுமார் தரப்பினர் ரணிலுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று மக்களை வலியுறுத்தினார்கள். இது சமஷ்டிக்கு வாக்களிக்க வேண்டாம் என்பதே. இதனை அவர் மறந்திருக்க முடியாது.

வரலாறு இப்படியிருக்க நாங்கள் வடக்கு கிழக்கு இணைப்பை பேசவில்லை என்று கூறுவது சுத்தப்பொய். நாங்கள் இன்றும் சமஷ்டியை வலியுறுத்தி வருகின்றோம், அல்லது சமஷ்டியை எட்டும் வரைக்கும் இந்திய முறையிலான தீர்வை வலியுறுத்தியிருகின்றேன்.

கஜேந்திரகுமாரின் தந்தை மற்றும் அவரின் பேரன் ஆகியோர் உன்னதமான தலைவர்கள். எனவே கஜேந்திரகுமார் இவர்களின் வரலாறுகளை அறிந்து பேசவேண்டும். சம்பந்தன் தற்போது இருக்கும் கதிரை என்னுடையது. எதிர்க்கட்சித் தலைவர் பதவியை நான் கூறவில்லை. மற்றைய பதவி என்னுடையது. நான் பல விட்டுக் கொடுப்புக்களை செய்ததாலேயே அவருக்கு இந்தப் பதவி கிடைத்தது" எனவும் குறிப்பிட்டார். (அ)

## சரித்திரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றுமையுடன் ஓரணியில் திரண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலை 'வீடு' சின்னத்தில் எதிர்கொண்டு சரித்திரம் படைப்போம். இந்த நம்பிக்கை எனக்கு உண்டு"

இவ்வாறு தன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), த.சித்தார்த்தன் (புளொட்) ஆகியோரிடம் தான் கோரிக்கை விடுத்தார் என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு ஜனநாயகக் கட்சி. இது ஒரு குடும்பம் போன்றது. குடும்பத்துக்குள் சிறுசிறு பிரச்சினைகள், தவறுகள் வருவது வழமை. இதை நாம் பெரிது படுத்தக்கூடாது. எக்காரணம் கொண்டும் கூட்டமைப்பிலிருந்து வெளியேறவேண்டாம் என்று பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), த.சித்தார்த்தன் (புளொட்) ஆகியோரிடம் நான் விநயமாகக் கேட்டுள்ளேன். ஆசனப் பங்கீட்டு விவகாரத்தைப் பேசித் தீர்த்துக்கொள்ளலாம்" என்றும் பங்காளிக் கட்சிகளுக்குத் தெரிவித்தார் என சம்பந்தன் சொன்னார்.

உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்
மரண அறிவித்தல்
நினைவஞ்சலி
கண்ணீர் அஞ்சலி
கட்டணம் இன்றி பிரசுரிக்க
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
எதிரொலி Ethiroli
021 3004848
நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வெடித்திருக்கும் ஜெருசலேம்!

## அப்படி என்னதான் அங்கு இருக்கிறது?



அரபு நாடுகள் மட்டுமின்றி ஐரோப்பிய நாடுகளின் கடும் எதிர்ப்பையும் மீறி ஜெருசலேமில் அமெரிக்க தூதரகத்தை அமைக்க அமெரிக்க அதிபர் ட்ரம்ப் உத்தரவு பிறப்பித்துள்ளார். இதன் மூலம் ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அமெரிக்கா அங்கீகரித்துள்ளது.

இதனால் ஜெருசலேம் யாருக்கு சொந்தம்? என்ற பல ஆண்டு சர்ச்சை மீண்டும் தொடங்கியுள்ளது. ஜெருசலேமிற்காக 75 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் இஸ்ரேல் - அரபு உலகம் இடையிலான மோதல் மீண்டும் கூர்மையாகியுள்ளது.

இந்நிலையில் இந்தப் போராட்டத்தின் பின்னணியை சற்று பின்னோக்கி பார்க்கலாம்.

ஜெருசலேம் என்பது யூத, கிறிஸ்தவ, இஸ்லாம் மதங்களின் தொடர்பான பகுதியாக ஆரம்பம் முதலே பார்க்கப்பட்டு வருகிறது. இதனால், இந்த மூன்று தரப்பினரும் இதற்கு உரிமை கொண்டாடி வருகின்றனர். உலகின் மிகப் பழமையான நகரங்களில் ஒன்றான ஜெருசலேமில், பழங்கால கட்டிடங்களும் உள்ளன. ஜெருசலேமின் பழைய நகரம் உலகின் பாரம்பரிய பகுதியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மன்னர் சாலமோன் காலத்து தேவாலயங்கள் அங்கு இருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த நூற்றாண்டில் ஜெருசலேம் மோதல் தீவிரமடைந்தது 1948இல்தான். அப்போது நடந்த அரபு - இஸ்ரேல் போரின் போது ஜெருசலேம் நகரின் மேற்குப் பகுதியை இஸ்ரேல் கைபற்றியது. மற்ற பகுதிகள் ஜோர்டானின் வசம் சென்றன. பின்னர் 1967 ஆம் ஆண்டு நடந்த போரில் ஜோர்டான் வசம் இருந்த ஜெருசலேம் நகரின் கிழக்கு பகுதியை இஸ்ரேல் கைப்பற்றியது. அன்று முதல் ஜெருசலேமை தன் வசம் வைத்துள்ள இஸ்ரேல், அங்கு அரசு அலுவலகங்களை அமைத்தது.

ஆனால், இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை எந்த நாடும் ஏற்றுக் கொள்ளவில்லை. உலக நாடுகளின் தூதரகங்கள் அனைத்தும் டெல்அவிவ் நகரில் அமைந்துள்ளன. அந்த நகரைத்தான் இஸ்ரேலின் தலைநகராக உலக நாடுகள் ஏற்றுள்ளன. ஜெருசலேம் மீது இஸ்ரேலும், பாலஸ்தீனமும் உரிமை கொண்டாடி வருவதால் அந்த சர்ச்சையில் தலையிட உலக நாடுகள் விரும்பவில்லை.

இதுபற்றி ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கும்போது -

ஜெருசலேம் நகரின் வரலாறு கிமு 3000 ஆண்களுக்கு முந்தையது என வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கின்றனர். இதற்கான ஏராளமான தொல்லியல் ஆராய்ச்சிகள் நடந்துள்ளன. எனினும் நவீன வரலாற்றில் 1924 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் பெரிய அளவில் பிரச்சினைகள் எழுந்தன. ஜோர்டான் அந்நகரை தங்கள் கட்டுப்பாட்டில் எடுக்க முனைந்ததை யூத மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. வரலாற்று ரீதியாக மட்டுமின்றி இட அமைப்பு முறையிலும் அந்நகரம் இரு தரப்புக்குமே மிக முக்கியமானது.

ஜெருசலேம் என்பது தனக்கான அங்கீகாரமாக பாலஸ்தீனம் கருதுகிறது. ஆனால், ஜெருசலேம் தனது வரலாற்று உரிமை என இஸ்ரேல் கருதுகிறது. எனவே இருதரப்பும் இதை விட்டுக்கொடுக்க முடியாது. ஜெருசலேம் நகரை இஸ்ரேலின் தலைநகராக அமெரிக்கா ஏற்றுக் கொண்டதன் மூலம் இந்த பிரச்சினை தீவிரமாகியுள்ளது.

அரபு நாடுகள் இதனை ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. இஸ்லாமிய ஒத்துழைப்பு நாடுகளின் அமைப்பின் மாநாட்டில் இந்த விவகாரம் தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட உள்ளது. அரபு நாடுகள் முக்கிய முடிவுகளை எடுக்கக் கூடும். இந்த விவகாரம் மத்திய கிழக்கு அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த விவகாரத்தில் அமெரிக்காவும் விடாப்பிடியாக இருப்பதால் மத்திய கிழக்கில் மீண்டும் ஒரு போர்ச் சூழல் உருவாகியுள்ளது. இதை தவிர்க்க வேண்டிய நடவடிக்கையில் ஐ.நா. சபையும் ஈடுபட்டுள்ளது" எனக் கூறினார்.(ஐ)



# குழந்தையை பிரிட்ஜில் வைத்த தாய்

பேரு, டிச. 09

பேரு நாட்டிலுள்ள வைத்தியாலை ஒன்று தனது குழந்தையின் இறப்புச் சான்றிதழைக் கொடுக்கத் தாமதமாக்கியதால், தாய் ஒருவர் இறந்த தனது குழந்தையின் உடலை வீட்டு பிரிட்ஜில் வைத்தமை அங்கு பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

மோனிகா பலோமினா என்ற பெண்ணுக்குக் கடந்த சனிக்கிழமை குழந்தை பிறந்தது. பிறந்த குழந்தை சரியான வளர்ச்சியடையாதமையால் தீவிர சிகிச்சைக்குப் பின் கடந்த திங்கட் கிழமை இறந்துவிட்டது.

பேரு நாட்டில் சட்டப்படி, ஒருவர் இறந்து விட்டால் அவரது இறப்புச் சான்றிதழைக் கொடுத்த பின்னரே இறுதிச் சடங்குகள் செய்ய முடியும்.

குறித்த வைத்தியாசலையில் குழந்தை இறந்த பின்னர், தாய்க்கு மருத்துவர் கொடுத்த தொந்தரவின் காரணமாகவே, இறப்புச் சான்றிதழ் பெறத் தாமதமாகியது. இதனாலலேயே, அவர் குழந்தையின் உடலைத் தனது வீட்டுக்கு எடுத்துச் சென்று, பிரிட்ஜில் வைத்துள்ளார்.

# பத்திரிகையாளராகும் நயன்தாரா



'அறம்' திரைப்படத்தின் வெற்றியால் திளைத்துள்ள நயன்தாரா, அடுத்த அதிரடிக்குத் தயாராகியுள்ளார்.

'அறம்' படத்தில் கலெக்டர் வேடத்தில் நடித்த அவருக்கு, பெரும் பாராட்டுக்கள் குவிந்து வருகிறது.

இந்த நிலையில், தற்போது பத்திரிகையாளராக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். ஷரதா ஸ்ரீநாத் நடிப்பில் கடந்த ஆண்டு கன்னடத்தில் வெளியான வெற்றிப்படமான 'யூடர்ன்' என்ற படத்தின் தமிழ் மீள் பதிப்பிலேயே நயன்தாரா நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# போதையில் வெட்டிய தமிழருக்கு சிறை!



சிங்கப்பூரில் குடிபோதையில் கத்தியால் வெட்டிய வழக்கில் சிங்கப்பூர்த் தமிழருக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சிங்கப்பூரில் அருணாசலம் மணிகண்டன் என்பவர் கட்டிடத் தொழிலாளியாக பணிபுரிந்து வந்தார். அவருடன் கணேசன் அருண் பிரகாஷ் என்ற மற்றொரு தமிழரும், இன்னும் பலரும் தங்கி வேலை செய்து வந்தனர்.

இந்த நிலையில், கடந்த மார்ச் மாதம் ஒரு நாள் அருணாசலம் மது குடித்துவிட்டு வந்து அறையில் வாந்தி எடுத்து அசிங்கமாக்கிவிட்டார். அதைக் கண்ட கணேசன், அவரை அறையைக் கழுவி சுத்தம் செய்யுமாறு கூறினார்.

ஆனால் அதை அருணாசலம் செய்யவில்லை. இதனால் அவர்களிடையே தகராறு ஏற்பட்டது.

அப்போது அங்கு வந்த அவர்களின் மேற்பார்வையாளர் இதில் தலையிட்டு அருணாசலத்தை அறையை சுத்தம் செய்யுமாறு கூறினார்.

அப்போது குடிபோதையில் இருந்த அருணாசலம் பொங்கி எழுந்து, கணேசனை கத்தியை எடுத்து வெட்டினார். இதில் அவர் படுகாயம் அடைந்தார். அதைத் தொடர்ந்து சக தொழிலாளர்கள் அவரை மீட்டு, தேசிய பல்கலைக்கழக வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இது தொடர்பாக அருணாசலம் கைது செய்யப்பட்டார். அவர் மீது அங்குள்ள நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. வழக்கு விசாரணையின்போது அவரது தரப்பில் ஆஜரான சட்டத்தரணி, தனது கட்சிக்காரர் செய்த தவறுக்காக இப்போது மனம் வருந்துவதாகக் கூறி குறைவான தண்டனை அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அதைத் தொடர்ந்து நீதிபதி ஹமிதா இப்ராகிம் அவருக்கு 3 ஆண்டு சிறைத்தண்டனையும், 6 பிரம்படியும் வழங்குமாறு உத்தரவிட்டு தீர்ப்பு அளித்தார்.



# விசாரணையால் பரபரப்பு!

தமிழகமுன்னாள்முதல்வர்ஜெயலலிதா, வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தபோது, அரசுதரப்பில் நியமிக்கப்பட்ட வைத்தியர்களில் 4 பேர் அவரைப் பார்க்கவே இல்லை என வாக்குமூலம் அளித்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக விசாரணை தொடங்கியுள்ள நிலையியேயே அவர்கள் நால்வரும் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர். (ஐ)

# 'அணு ஆயுதப்போர் தவிர்க்க முடியாதது'

கொரிய தீபகற்ப பகுதியில் அணு ஆயுதப்போர் தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது என வடகொரியா கூறி உள்ளது.

வடகொரியா சமீபத்தில், அமெரிக்காவின் பிரதான பகுதிகளைத் தாக்குகின்ற வல்லமை கொண்ட ஏவுகணையை ஏவி சோதித்தது. மேலும், தன்னைத்தானே அணு ஆயுத நாடாகவும், ஏவுகணை நாடாகவும் அறிவித்துக்கொண்டது.

அது அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக ஐ.நா. சபையின் அரசியல் விவகாரங்களுக்கான உயர் அதிகாரி ஜெப்ரி பெல்ட்மேன், சிறப்பு தூதராக வடகொரியாவுக்கு சென்றார். அவர் பியாங் யாங் நகரில் அந்த நாட்டின் வெளியுறவு மந்திரி ரி யோங் ஹோவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

இந்தநிலையில் கொரிய தீபகற்ப பகுதியில் அணு ஆயுதப்போர் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது என வடகொரியா கூறி உள்ளது.


இதுபற்றி அந்த நாட்டின் செய்தி தொடர்பாளர் ஒருவர் கூறும் போது,

"மக்களின் இதயங்களில் வீற்றிருக்கிற தலைவர் கிம் ஜாங் அன் மீது அமெரிக்க உளவுத்துறையின் தலைவர் மைக் போம்பியோ ஆத்திரம் ஏற்படுத்தும் வகையில் கருத்து தெரிவித்துள்ளார். பெரிய அளவில் அணு ஆயுத போர் பயிற்சியை அமெரிக்கா நடத்தி உள்ளது. எங்கள் வல்லமையை கொண்டு அமெரிக்காவுக்கு சரியான பதிலடி கொடுப்போம்" - என்று குறிப்பிட்டார்.

இதனால் கொரிய தீபகற்ப பகுதியில் புதிய பரபரப்பு தொற்றிக் கொண்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயம் தந்த விலகல்




ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் ரஷ்யாவின் குஸ்னெட்சோவா பங்கேற்க மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் எதிர்வரும் ஜனவரி 15 தொடக்கம் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில், ரஷ்யாவின் முன்னணி டென்னிஸ் வீராங் கனையும் தரவரிசையில் 12ஆவது இடத்தில் உள்ளவருமான குஸ்னெட்சோவா, மணிக்கட்டில் ஏற்பட்ட காயத்துக்கான சத்திர சிகிச்சை காரணமாக பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குஸ்னெட்சோவா, ஏற்கனவே பிரெஞ்ச் ஓபன் மற்றும் அமெரிக்க ஓபனைக் கைப்பற்றியுள்ளார். இவருடன், 94ஆவது இடத்தில் இருக்கும் சீன வீராங்கனையான செங் சொய்சாயும் பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்துக்கான ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்ற செரீனா வில்லியம்ஸ், கடந்த செப்டம்பர் மாதம் குழந்தை பெற்றார்.

இதனால், செரீனா அடுத்த தொடரில் பங்கேற்பாரா என்பது குறித்த அறிவிப்பு எதுவும் இதுவரை வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# தங்கப்பந்து எனக்குத்தான்

போர்த்துக்கல்லைச்சேர்ந்த உதைபந்தாட்ட நட்சத்திரமான கிறிஸ்ரியானோ றொனால்டோ, இந்த ஆண்டுக்கான தங்கப்பந்து விருதை வென்று சாதனை படைத்துள்ளார்.

உலகில் சிறந்து விளங்கும் உதைபந்தாட்ட வீரர்களுக்கு ஆண்டுதோறும் தங்கப்பந்து விருது வழங்கப்பட்டு வருகிறது.

இதன், 2017ஆம் ஆண்டுக்கான விருதுப்பட்டியலில் ஆரம்பத்தில் 30 வீரர்கள் இடம்பெற்றனர். பின்னர் அதில் இறுதி செய்யப்பட்டு, மெஸ்ஸி, நெய்மர் மற்றும் றொனால்டோ ஆகியோர் இடம்பிடித்தனர்.

இம்மூவருக்குமான போட்டியில், தற்போது தங்கப் பந்து விருது றொனால்டோ வசம் சென்றுள்ளது.

றொனால்டோ விளையாடிவரும் ரியல் மாட்ரிட் கழகமானது, சம்பியன்ஸ் லீக், லா லிகா உள்ளிட்ட தொடர்களில் கிண்ணம் வென்றது. இவற்றுக்கு உறுதுணையாக இருந்ததுடன், ஐரோப்பிய உதைபந்தாட்டத் தொடரில் போர்த்துக்கல் அணி சம்பியன் பட்டம் வெல்லவும் அவர் உதவியுள்ளார்.

இவற்றைக் கணக்கில் எடுத்தே அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை, இந்த விருதை அதிக தடவைகள் பெற்ற (5 தடவைகள்) வீரர் என்ற பெருமையைப் பெற்றிருந்த, ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸியின் சாதனையை தற்போது றொனால்டோ சமன் செய்துள்ளார். (ஐ)

# குளிர்கால ஒலிம்பிக்: அமெரிக்கா உறுதி

தென்கொரியாவில் நடைபெறவுள்ள குளிர் கால ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து ஒரு போதும் அமெரிக்கா பின் வாங்கமாட்டாது என அமெரிக்க ஒலிம்பிக் குழு அறிவித்துள்ளது.

குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் தென் கொரியாவின் பியோங்சாங் நகரத்தில் நடைபெறவுள்ளன.

இதற்கு முன்னர், அமெரிக்கா தனது விளையாட்டு நட்சத்திரங்களை தென் கொரியாவில் நடக்கவிருக்கும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளுக்கு அனுப்புவது சந்தேகமே என்று கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில், அமெரிக்க ஒலிம்பிக் குழு நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

“தென்கொரியாவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் அமெரிக்காவின் திட்டத்தில் எந்த ஒரு மாற்றமும் இல்லை” எனக் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# மற்றொரு சாதனை

சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டத் தொடரில் கிறிஸ்டியானோ றொனல்டோ புதியதொரு சாதனையைப் படைத்துள்ளார்.

சம்பியன்ஸ் லீக் தொடரில், ரியல்மார்டிட் அணிக்காக விளையாடிவரும், போர்த்துக்கல்லைச் சேர்ந்த நட்சத்திர வீரரான றொனால்டோ, நேற்றுமுன்தினம் நடைபெற்ற டார்ட்மென்ட் அணிக்கு எதிரான போட்டியில், கோல் ஒன்றை அடித்தார்.

இதன் மூலம் ஒரு பருவகாலத்தில் நடைபெறும் தொடரின், அனைத்துக் குழு நிலைப் போட்டிகளிலும் கோல் அடித்த வீரர் என்ற சாதனையை றொனால்டோ படைத்துள்ளார்.

இந்தப் போட்டியில் ரியல் மார்டிட் அணி. 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஐ)




# 2இல் கோஹ்லி 10க்குள் சண்டிமால்





ஐ.சி.சி. வெளியிட்டுள்ள புதிய டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் விராட் கோஹ்லி இரண்டாவது இடத்தைப் பிடித்தார். அதேவேளை, இலங்கையின் சண்டிமால் முதல் 10 இடங்களுக்குள் வந்துள்ளார்.

இலங்கைக்கெதிரான தொடர் ஆரம்பிக்கும்போது, 806 புள்ளிகளுடன் 6ஆவது இடத்தில் காணப்பட்ட விராட் கோஹ்லி, 2 இரட்டைச் சதங்கள் உள்ளடங்கலாக 5 இன்னிங்ஸ்களில் 152.50 என்ற சராசரியில் 610 ஓட்டங்களைக் குவித்திருந்தார். இதைத் தொடர்ந்து, 893 புள்ளிகளைப் பெற்றுள்ள அவர், 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்ரீபன் ஸ்மித், தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுகிறார்.

இதேவேளை,இலங்கை அணியின் டெஸ்ட் தலைவரான டினேஷ் சண்டிமால், இந்தியாவுக்கெதிரான தொடரில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து, 9ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். இத்தொடரை 20ஆவது இடத்தில் ஆரம்பித்த அவர், 6 இன்னிங்ஸ்களில் 366 ஓட்டங்களைப் பெற்று, 11 இடங்கள் முன்னேறி, 9ஆவது இடத்தைப் பிடித்தார். இது, அவர் பெற்றுக்கொள்ளும் சிறப்பான நிலையாகும்.

அதேபோல், அஞ்சலோ மத்தியூஸ், இத்தொடரை 24ஆவது இடத்தில் ஆரம்பித்த நிலையில், முதலிரு போட்டிகளிவும் சொதப்பி, 30ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டார். எனினும், 3ஆவது போட்டியில் சிறப்பாக விளையாடியதன் காரணமாக, 7 இடங்கள் முன்னேறி, 23ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

**முதல் 10 துடுப்பாட்ட வீரர்கள்**

ஸ்ரீபன் ஸ்மித், விராட் கோஹ்லி, ஜோ ரூட், செற்றேஸ்வர் புஜாரா, கேன் வில்லியம்ஸன், டேவிட் வோர்னர், ஹஷிம் அம்லா, அஸார் அலி, தினேஷ் சண்டிமால், டீன் எல்கர்.

அதேவேளை, பந்துவீச்சாளர்களில், ஜேம்ஸ் அண்டர்சன் தொடர்ந்தும் முதலிடம் வகிக்கிறார்.

**முதல் 10 பந்துவீச்சாளர்கள்**

ஜேம்ஸ் அண்டர்சன், கஜிஸ்கோ றபடா, ரவீந்திர ஜடேஜா, ரவிச்சந்திரன் அஷ்வின், ரங்கன ஹேரத், ஜொஷ் ஹேஸல்வூட், நீல் வக்னர், மிற்சல் ஸ்ரோர்க், நதன் லையன், டேல் ஸ்டெய்ன். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 09.12.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.